# கழுகின் சத்தம்

## ஜனவரி 14, 2024



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்திகளிலிருந்து

# ஆனால் ஒரு எறும்பைக் கவனித்து கற்றுக் கொள்ள வேண்டுமென்று சாலொமோன் கூறினான் என்று நினைக்கிறேன்



சகோ.வில்லியம் பிரன்ஹாம்
அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# நீதிமொழிகள் 6:6-11

6. சோம்பேறியே, நீ
எறும்பினிடத்தில்போய், அதின்
வழிகளைப் பார்த்து, ஞானத்தைக்
கற்றுக்கொள்.


7. அதற்குப் பிரபுவும், தலைவனும்,
அதிகாரியும் இல்லாதிருந்தும்,

8. கோடைகாலத்தில் தனக்கு
ஆகாரத்தைச் சம்பாதித்து,
அறுப்புக்காலத்தில் தனக்குத்
தானியத்தைச் சேர்த்துவைக்கும்.

9. சோம்பேறியே, நீ எவ்வளவுநேரம்
படுத்திருப்பாய்? எப்பொழுது உன்
தூக்கத்தைவிட்டு எழுந்திருப்பாய்?

10. இன்னுங் கொஞ்சம் தூங்கட்டும், இன்னுங் கொஞ்சம் உறங்கட்டும், இன்னுங் கொஞ்சம் கைமுடக்கிக்கொண்டு நித்திரை செய்யட்டும் என்பாயோ?

11. உன் தரித்திரம் வழிப்போக்கனைப்போலவும், உன் வறுமை ஆயுதமணிந்தவனைப்போலவும் வரும்.



*இதைக்குறித்து கர்த்தருடைய தீர்க்கதரிசியாகிய சகோ.பிரன்ஹாம் கூறுவதை நாம் வாசிக்கலாம்:*

---

## செய்தி: 65-02-17 கர்த்தருடைய சமூகத்தினின்று விலகி ஓடிப்போகும் ஒரு மனிதன்

---

46. வேதத்தில் 'சிறு தீர்க்கதரிசியாக (Minor prophet) கருதப்படும் யோனா அந்த நகரத்துக்கு செல்லும்படி கட்டளை பெற்றான்.

இங்கு நம் அனைவருடைய உதாரணத்தையும் நாம் காண்கிறோம். நாம் ஒவ்வொருவரும் ஏதாவதொன்றிலிருந்து ஓடி விடுகிறோம். நாம் தொல்லைகளிலிருந்து ஓடிவிடுகிறோம், பொறுப்பிலிருந்து ஓடிவிடுகிறோம், நாம் அனை

வருமே அப்படி செய்யக் கூடியவர்களா யிருக்கிறோம்.

நாம் நின்று அதை சந்திப்பதைக் காட்டிலும் அதை விட்டு ஓடிப்போகக் கூடியவர்களாயிருக்கிறோம். பாருங்கள்? அவ்வாறு ஓடிப்போகும் நிலையில் நம்மைக் காண்கிறோம்.

சில நேரங்களில் வேலையை விட்டு நாம் ஓடுகிறவர்களாயிருக்கிறோம். நமக்கு வேலை செய்ய பிரியமில்லை. வேலை செய்யாமலேயே வாழ்க்கையை நடத்தலா மென்று சிலர் எண்ணுகின்றனர்.

ஆனால் ஒரு எறும்பைக் கவனித்து கற்றுக் கொள்ள வேண்டுமென்று சாலொ மோன் கூறினான் என்று நினைக்கிறேன்.

47. உங்களுக்குத் தெரியுமா, ஒரு சிறு எறும்பு-உழைத்து ஆகாரத்தை சேமித்து

வைக்காத எந்த ஒரு எறும்பும், மாரி காலத்தில் ஆகாரத்தை உண்ணாதிருக்கும் என்று அவர்கள் கூறுகின்றனர். எனவே ஒவ்வொருவரும் உழைக்க வேண்டும்.

48. நாம் செய்ய வேண்டிய காரி யங்கள் அநேகம் உண்டு, நாம் சந்திக்க வேண்டிய பொறுப்புகள் அநேகம். ஒவ் வொருவரும் ஒரு குறிப்பிட்ட பொறுப்பை சந்திக்க வேண்டியவர்களாயுள்ளனர்.



நீங்கள் எறும்பிடமிருந்து ஒரு பாடத்தைக் கற்றுக் கொள்ள வேண்டுமென்று வேதம் உரைக்கிறது என்று உங்களுக்குத் தெரியும். அவர்கள் வேலை செய்யாவிட்டால், சாப்பிடக் கூடாது. எனவே அது முற்றிலும் உண்மை.



செய்தி: **64-08-23 M கேள்விகளும் பதில்களும் COD #19**

சகோ.வில்லியம் பிரன்ஹாம்



அவ்வாறு கஷ்டப்பட வேண்டாம். நாம் அவ்வாறு செய்வதை இயேசு விரும்புவதில்லை. நாம் நம்மைப் பேணி பாதுகாக்கவே அவர் விரும்புகிறார்...



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

## செய்தி: தீர்மானத்தின் நேரம், 59-0611

5. சகோதரன் டாமி ஹிக்ஸ் அவர்கள் தம்முடைய பலத்துக்கு மிஞ்சி மிகக்கடுமை யாக உழைத்ததன் விளைவாக, அவருக்கு ஒரு மாரடைப்பு ஏற்பட்டதாக நான் கேள்விப்பட்டேன்.

ஓ, நான் அன்றொரு இரவில் கூறினபடி? தேவனுடைய ஜனங்களுக்கு ஒரு சூரைச் செடி - இளைப்பாறுதல் அவசியமாயுள்ளது.

நாம் அப்படியே கர்த்தருக்குக் காத் திருந்து, நாம் அவருக்குக் காத்திருக்கை யில், நம்முடைய பெலனைப் புதுப்பித்துக் கொள்வோமாக. அவை எல்லாவற்றையும் செய்து விட முயற்சிக்க வேண்டாம்.

நான் உட்காருவதற்கு முன்பாக வருகிற ஒவ்வொருவருக்காகவும் நான் ஜெபிக்கும் படி தீர்மானித்து, ஏழு நாட்கள் பகலும் இரவும் ஜெப வரிசையில் தரித்திருந்து, என்னுடைய ஆகாரத்தை பிரசங்க மேடை யிலேயே சாப்பிட்டதை நான் நினைவு கூருகிறேன்.

அங்கே நான் தொடங்கின போது இருந்ததைக் காட்டிலும் கடந்த இரவு பத்து மடங்கு அதிகமாக இருந்தது. அப்போது நான் ஏறக்குறைய மரித்தே போய் விட்டேன். என்னால் தூங்க முடியவில்லை, நான் எங்கே இருந்தேன் என்பதை அறி வதே கடினமாக இருந்தது, நான் மிகவும் களைப்பாகவும் சோர்வுற்ற நிலையிலும் இருந்தேன்.

அவ்வாறு கஷ்டப்பட வேண்டாம். நாம் அவ்வாறு செய்வதை இயேசு விரும்புவ தில்லை. நாம் நம்மைப் பேணி பாதுகாக் கவே அவர் விரும்புகிறார்...




இந்த மானிட சரீரங்கள் பலமுள்ளவைகள்தான். ஆனாலும் அவைகளுக்கு இளைப்பாறுதல் தேவையே.
சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

## செய்தி: இங்கே உனக்கு என்ன காரியம்?, 59-0301 E

78. இயேசு, "வனாந்திரமான ஓரிடத்தில் தனித்துச் சற்றே இளைப்பாறும்படி போவோம் வாருங்கள்" என்றார் என்பதை நீங்கள் அறிவீர்கள்.

நீங்கள் ஒய்வெடுக்க வேண்டியதில்லையென்று இந்த நபர்களில் சிலர் நினைக்கிறார்கள். அப்படியானால் அவர்கள் ஏறத்தாழ சீக்கிரத்தில் களைப்படைந்துவிடுவார்கள் என்பதை நாம் கண்டறிகிறோம்.

அவர்கள் ஒய்வெடுக்கவில்லையென்றால், அப்பொழுது அவர்கள் தங்களை எங்காவது பாழாக்கிக் கொள்வதை கண்டறிகின்றனர்.

இன்றிரவு நம்முடைய சகோதரன் பில்லி கிரஹாமும் அந்நிலையில்தான் உள்ளார். அவர் வரம்புமீறி செயலாற்றி காரியத்தைக் கெடுக்கவே முயற்சிக்கிறார்.

இந்த மானிட சரீரங்கள் பலமுள்ளவை கள்தான். ஆனாலும் அவைகளுக்கு இளைப்பாறுதல் தேவையே.



அவர் பிரசங்க ஊழியத்தின் மூலம் போதிய பணம் சம்பாதிக்கவில்லையென்று அவருடைய மனைவி கருதினாள். எனவே அவர் வேலை தேட வேண்டுமென்று கூறினாள். அவர் எந்த நேரமும் வேதாகமத்தையே படித்துக் கொண்டிருந்தார்.



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 61-12-31E தேவன் எங்களோடே இருந்தால் இந்த அற்புதங்களெல்லாம் எங்கே?

6. இன்றிரவு அநேகர் வந்துள்ளதைக் காண்பது மிகவும் நன்று. சகோ. கிரகாம் ஸ்னெல்லிங், “நாம் சென்று சீயோன் மலையின் மேல் வாழுவோம்” என்னும் அந்த பழைய பாடலைப் பாடி முடிக்கின்ற தருணத்தில் நான் உள்ளே நுழைந்தேன்.

7. ரபீ லாசனை தெரிந்தவர் இங்கு யாருமில்லை என்று நினைக்கிறேன். யாருக்காவது அவரைத் தெரியுமா? ஆம், இரண்டு மூன்று பேருக்கு - சகோ. கிரகாம்... சகோ. ஸ்லாட்டர் அந்த பாடல் எனக்கு சகோ. லாசனை ஞாபகமூட்டியது. அவர் எப்படி அந்த பாடலைப்

பாடுவாரென்று ஞாபகமுள்ளதா? அவர் சிறு உருவம் படைத்தவர். அவரை நான் 'ரபீ' என்றழைப்பதுண்டு. ஏனெனில் அவர் ஒரு சிறு தட்டையான கறுப்பு தொப்பியை அணிவது வழக்கம். அவர் ஒரு பெந்தெகொஸ்தே போதகர், ஆமை ஓடு மூக்கு கண்ணாடியை அணிந்திருப்பார், நான், 'காண்பதற்கு யூத ரபீயைப் போல் இருக்கிறீர்" என்று அவரிடம் கூறியிருக்கி றேன். எனவே அவரை எப்பொழுதும் நாங்கள்: 'ரபீ லாசன்' என்றழைப்போம், மிகவும் அருமையான சகோதரன். அவருக்கு மிகவும் வயதாகியிருந்தது. அவருக்கு கூன் விழுந்திருந்தது. அவர் வாகன விபத்துக்குள்ளாகி, அவருடைய முழங்கால்கள் விரைத்துப் போனது. அவர் தம்முடைய கக்கத்தண்டத்தை, இல்லை, ஊன்றி நடக்கும் தடியை இந்த பக்கத்தில் தொங்க விடுவார். நான் இந்த நாற்காலி

யில் அமர்ந்து கொண்டிருப்பேன். "மானிட வாழ்க்கையின் சக்கரங்கள் சுழலாமல் நிற்கும் நேரத்தில்" என்னும் பாடலின் அந்த பாகத்தை அவர் பாடும்போது, அவர் தமது நடக்கும் தடியைக் கையிலெடுத்து, என் கழுத்தில் அதை கொக்கியிட்டு, என்னை இப்படி அவர் பக்கம் இழுத்து, அவருடைய கைகளை என் தோளின் மேல் போட்டு, "நாம் சென்று சீயோன் மலையின் மேல் வாழுவோம்" என்று பாடுவார்.

8. இங்குள்ள வேறு யாருக்காவது ரபீலாசனைத் தெரியுமா? ஒரு சிலருக்கு மாத்திரமே. அப்படியானால், இதை கூற விரும்புகிறேன். அவருக்கு ஒரு விசித்திர மான காரியம் சம்பவித்தது. அவர் நல்ல பிரசங்கி, அருமையான சகோதரன். அவர் பெரிய பொறுப்பு ஒன்றும் பெற்றிருக்க வில்லை. அவருடைய ஊழியம் அப்படிப் பட்டதல்ல. ஆனால் அவருக்கு அளிக்கப்

பட்டிருந்த பொறுப்பில் அவர் உண்மையாய் வாழ்ந்தார் என்று நானறிவேன். அது தான் முக்கியமானது.

9. அவர் பிரசங்க ஊழியத்தின் மூலம் போதிய பணம் சம்பாதிக்கவில்லையென்று அவருடைய மனைவி கருதினாள். எனவே அவர் வேலை தேட வேண்டுமென்று கூறினாள். அவர் எந்த நேரமும் வேதாகமத்தையே படித்துக் கொண்டிருந்தார். ஒரு நாள் அவளுக்கு அவர் மேல் அதிக கோபமூண்டது. அவள் அவருடைய மடியிலிருந்த வேதாகமத்தை பிடுங்கி, அடுப்பில் தீ மூட்டி அதை தீயிலிட்டு எரித்தாள். சில மாதங்கள் கழித்து அவள் கிறிஸ்துமஸ் மரத்துக்கு விளக்குகள் பொருத்திக்கொண்டிருந்த போது, கிறிஸ்துமஸ் மரம் தீப்பிடித்து அவளை அதே இடத்தில் எரித்துப் போட்டது. பாருங்கள், நீங்கள் எதை விதைக்கிறீர்களோ, அதையே

அறுப்பீர்கள், “நான் அபிஷேகம் பண்ணினவர்களை நீங்கள் தொடாமலும், என்னுடைய தீர்க்கதரிசிகளுக்குத் தீங்கு செய்யாமலும் இருங்கள்”. பாருங்கள்?

10. தேவனுடைய வார்த்தையைக் குறித்து ஒரு காரியம். அங்கு விபத்து நேர்ந்த அவர்கள்; சாத்தான் அவர்களுடைய பொருட்களை அழிக்க முயன்றான். நான் இதைக் கூறும் போது, அவர்கள் எழுந்து நின்று, யாரோ ஒருவர் உள்ளே வருவதற்காக இடங் கொடுப்பதைக் காண்கிறேன். அவர்களுடைய வாகன இணைப்பு வண்டி (trailer) அந்த அறையிலிருந்த எல்லாமே எரிந்து சம்பலாகி விட்டன. நான் அங்கு சென்று கண்டேன். அங்கு எரியாமலிருந்தவை ஆசீர்வதிக்கப்பட்ட வேதாகமும். என் புத்தகமும், சகோ. ஆஸ்பார்னின் புத்தகமும் என்று நினைக்கிறேன். மற்றவை

அனைத்துமே அந்த இணைப்பு வண்டியில் எரிந்து சாம்பலாகி யிருந்தன. நான் வேதாகமத்தை கையிலெடுத்த போது, அது வெளிப்புறத்தில் சிறிது புகைந்து கொண் டிருந்தது. கர்த்தருக்கு சித்தமானால், என்றா கிலும் ஒரு நாள் அந்த வேதாகமத்தை, பிரசங்க பீடத்துக்கு கொண்டு சென்று, “வானமும் பூமியும் ஒழிந்து போகும், என் வார்த்தைகளோ ஒழிந்து போவதில்லை” என்னும் பொருளின் பேரில் பேச விரும்புகிறேன் என்று அந்த சகோதரனிட மும் சகோதரியிடமும் கூறினேன். எல்லாமே போய்விட்ட பிறகு, வார்த்தை இன்னும் அங்குள்ளது. தேவன் தமது வார்த்தையை எவ்வளவு கவனமாகப் பாதுகாக்கிறார் என்பது மிகவும் அற்புத மல்லவா? இந்த வார்த்தை உங்களுக்குள் வர நீங்கள் அனுமதிப்பீர்களானால், அவர்

உங்களையும் கவனமாகப் பாதுகாப்பார். அது உண்மை.

11. வெள்ளம் வந்த சமயம், இங்கு ஓரிரவு நான் பிரசங்கித்துக் கொண்டிருந்தேன். அப்பொழுது என் வேதாகமத்தை இங்கு விட்டு சென்று விட்டேன். 1937ம் ஆண்டு வெள்ளம் திடீரென்று ஒரே இரவில் வந்து, இந்த கூடாரத்துக்குள்ளும் தண்ணீர் வந்து, இந்த பிரசங்க பீடத்தை மேலே கூறை வரைக்கும் உயர்த்திக் கொண்டு சென்றது. அப்பொழுது இங்கு வேறு ஒரு கூறையும் இல்லை. பிரசங்க பீடத்திலிருந்த வேதாகமம் மூழ்கிப் போவதற்குப் பதிலாக மிதந்து கூரை வரை எட்டினது. நான் இங்கு சுற்றிலும் படகோட்டி செல்ல வேண்டியதாயிருந்தது? தண்ணீர் மட்டம் இறங்கின போது, வேதாகமும் கீழே இறங்கி, நான் கடைசியாக எந்த அதிகாரத்தைப் படித்துக்

கொண்டிருந்தேனோ, அதே அதிகாரத்தில் வேதாகமம் திறக்கப்பட்டதாய் காணப்பட் டது. “வானமும் பூமியும் ஒழிந்து போகும், என் வார்த்தைகளோ ஒழிந்து போவ தில்லை” அது உண்மை. அவர் அற்புத மானவர். இல்லையா?



அதன்பிறகு, நாங்கள் இருவரும்
தேவனுடைய ஊழியத்தைத் தவிர வேறு
எந்த வேலையும் செய்ய முடியாத
அளவுக்கு இருந்த கட்டத்தை
ஆரம்பித்தோம்.
எனவே நான், எங்களிருவருடைய புதிய
எஜமானனுக்காக மகிழ்ச்சி
கொள்ளுகிறோம்.



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்தியிலிருந்து

# செய்தி: 60-12-11M பத்து கன்னிகைகள்

5. சகோதரன் நெவில் அவர்கள் எப்பொழுதும்... இதற்கு முன் இங்கு வந்திராத புதியவர்களுக்கு அவரைக் குறித்து நான் கூற விரும்புகிறேன். அவரது முகத்திற்கு முன்பாக முகஸ்துதியாக எதுவும் நான் சொல்லவில்லை. அவர் ஒரு மிகவும் கிருபை பெற்றவரான மனிதர். எப்பொழுதும் அப்படித்தான் இருந்திருக் கிறார். அவர் வேதவாக்கியத்தை வாசித்து, அதை ஜீவித்துக் காண்பிப்பவராக காணப் படுகிறார். அவர் எப்பொழுதும் கிறிஸ்து வுக்குள்ளாக ''கனம் பண்ணுகிறதிலே ஒருவருக்கொருவர் முந்திக் கொள்ளுங் கள்'' என்னப்பட்டவராக இருக்கிறார். அவர் எப்பொழுதும் பிறரை கனம்பண்ணு

கிற அவ்விஷயத்தில் முந்திக்கொள்ளுபவர். நான் அவரை அறிந்த நாள் முதலாய் அவர் அப்படிப்பட்டவராகவே இருந்து வந்திருக்கிறார். அவர் இக்கூடாரத்தில் வந்த நாள் முதலாய் அல்ல, அநேக ஆண்டுகளுக்கு முன்பாக நான் அவரை அறிந்த காலம் முதற்கொண்டே அவர் அவ்விதமாகத்தான் இருந்து வந்திருக்கிறார். முதன் முதலாக நான் அவரை சந்தித்து அவரை அறிந்துகொள்ள சென்ற பொழுது உள்ளதை நான் நினைவுகூருகிறேன். அவர் ஹோவர்ட் பார்க் என்ற இடத்திலுள்ள மெதோடிஸ்ட் சபையில் பிரசங்கிப்பதைக் கேட்க சென்றிருந்தேன். அது அநேக ஆண்டுகளுக்கு முன்பாக நடந்தது. அது இருபது அல்லது அதற்கு மேலாக உள்ள வருடங்களுக்கு முன்பாக என்று கருதுகிறேன். அப்பொழுதிலிருந்து அவரை எனக்குத் தெரியும்.


அவர் ஒரு வேலையும் செய்து வந்தார். அவர் ஹென்றிவில் என்ற ஊரிலிருந்து வந்தவர். அங்கே அவர் வனங்கள் சம்மந்தமான பணியில் ஈடுபட்டிருந்தார். அவர் தன் பிழைப்புக்காக அவ் வேலையை செய்து கொண்டே பிரசங்க மும் செய்து வந்தார்.

நானும் சமீபகாலம் வரையிலும் அவ் வாறு வேலை செய்து வந்திருக்கிறேன். அதே விதமாகத்தான் அவரும் இருந்தார்.


அதன்பிறகு, நாங்கள் இருவரும் தேவனுடைய ஊழியத்தைத் தவிர வேறு எந்த வேலையும் செய்ய முடியாத அள வுக்கு இருந்த கட்டத்தை ஆரம்பித்தோம்.

எனவே நான், எங்களிருவருடைய புதிய எஜமானனுக்காக மகிழ்ச்சி கொள்ளு கிறோம்.

சகோதரன் நெவில் அவர்களே! நீங்களும் அவ்வாறு இருக்கிறீர்களல்லவா? ஆம் ஐயா! நான் நிச்சயமாக இவ் வேலையை விரும்புகிறேன். ஆம் ஐயா. நான் அவரைக் குறித்து மிகவும் திருப்தி யடைந்திருக்கிறேன்.



# தேவனுக்காக எதையாவது எப்பொழுதாவது செய்த மனிதர்கள் தேவனோடு தனியாகவே நின்றனர் என்பதை ஞாபகம் கொள்ளுங்கள்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

## செய்தி: 62-04-08 யூகித்தல்

15. தேவனுக்காக எதையாவது எப்பொழுதாவது செய்த மனிதர்கள் தேவனோடு தனியாகவே நின்றனர் என்பதை ஞாபகம் கொள்ளுங்கள்.

பாதையில் இரண்டு பேருக்கு மாத்திரமே இடமுண்டு. அது நீங்களும் தேவனும் தான். நீங்கள்...

வார்த்தையின்படியுள்ள நம்பிக்கைக்கு உட்பட்டு எப்பொழுதாவது எதையாவது செய்த மனிதர்கள் தனித்தே நின்றனர்: மார்ட்டின் லூத்தர், ஜான் வெஸ்லி, அவர்களைப் போன்றவர்கள், ஃபின்னி, சாங்கி, கால்வின், நாக்ஸ், ஸ்பர்ஜன், மற்றவர்கள். பாருங்கள்? மோசே, எலியா,

அவர்கள் அனைவருமே தேவனுடைய வார்த்தையின் பேரில் தனியாக நின்றனர்.

அந்தவிதமாகத்தான் நீங்கள் இருக்க வேண்டும். அது ஒரு தனிப்பட்ட நபருடைய விவகாரமாக உள்ளது.

நீங்கள் தேவனுடைய வார்த்தையை எடுத்துக் கொண்டு, வார்த்தையின் பேரில் நிற்க வேண்டும்.

நீங்கள் நரகத்தில் இருந்து பிசாசினால் கடும் சித்திரவதைக்குட்பட்டு ... (ஊ) ... உங்களைச் சுற்றிலும் தீய ஆவிகள் சூழ்ந்து கொண்டு உங்களை ஓயாமல் வட்டமிட்டுக் கொண்டு, நீங்கள் தேவனிடமிருந்து என்றென்றுமாக பிரிக்கப்பட்டு, எந்த ஒரு நம்பிக்கையும் இல்லாமல் இருப்பதை சற்று நினைத்துப் பாருங்கள் - அதை குறித்து என்ன? **நாளைக் காலை சூரியன் உதிப்பதற்கு முன்னர் ஒருக்கால் நீங்கள் அந்த இடத்தில் இருக்கலாம்.** நண்பனே, நீ தயாராக இருப்பது நன்று.



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

## செய்தி: 59-04-10 காணக்கூடாததை நோக்கி பார்த்தல்

70. கர்த்தர் இங்கே இருக்கின்றார், அவர் அழைத்துக் கொண்டிருக்கின்றார். இயேசு இப்பொழுது உங்களை நோக்கி மிருதுவாக அழைத்துக் கொண்டிருக்கின் றார். **ஏவாளுக்கு இருந்தது போல, ஆதா முக்கு இருந்தது போல, ஒரு தெரிந்து கொள்ளுதலை செய்யத்தக்கதாக உங்க ளுக்கு ஒரு தருணமானது இருக்கின்றது. இப்பொழுது நீங்கள் எதையும் தெரிந்து கொள்ளும் உரிமையைப் பெற்றுள்ள ஒரு நபர்; நீங்கள் உங்கள் தெரிந்து கொள் ளுதலை செய்து கொள்ளலாம். உங்கள் நித்தியத்தை எங்கு கழிக்கப் போகிறீர்கள்? ஒரு மனிதன் மறுபடியும் பிறவாவிட்டால் அவன் இழக்கப்பட்ட ஒருவன் ஆவான்.**

நீங்கள் மறுபடியும் பிறந்துள்ளீர்களா? அப்படி இல்லையெனில் உங்கள் கரத்தை உயர்த்தி “சகோதரன் பிரன்ஹாமே, எனக் காக ஜெபியுங்கள், உங்கள் ஜெபங்களை சரியாக இந்நேரமே நான் வாஞ்சிக்கிறேன்” என்று கூறுங்கள். அது சரி. இங்கே கீழ்தளத்தில் இருக்கும் எல்லாரும், அரங் கின் மாடி இருக்கை வரிசையில் உள்ள எல்லாரும், அது அருமையானது. உங்கள் கரத்தை உயர்த்துங்கள், உத்தமமாயிருங் கள். நண்பர்களே நீங்கள் சிறிதளவு உத்தமத்தைக் கூட உடையவர்களாக இருங்கள்.

71. வாரக்கடைசியில் ... அல்லது வருகின்ற அடுத்த வாரத்தில், இந்த காரியங்களில் பேரில், இந்த மந்தத்தைக் (dullness) குறித்தும், இந்த உலகமானது தன்னுடைய விஷத்தன்மையான சுவா சத்தை அந்த மக்களின் முகத்திற்குள்ளாக

எப்படி ஊதியுள்ளது என்பதை குறித்தும் நான் அதிகமாக பிரசங்கிக்கப் போகிறேன். **அது மக்களை வஞ்சித்துள்ளது. அநேக மக்கள் தாங்கள் கிறிஸ்தவர்களாக இல்லா திருக்கையில், நாங்கள் கிறிஸ்தவர்கள் என்று நினைத்துக் கொண்டிருக்கின்றனர். மக்கள் அங்கே அடையப் போகும் ஏமாற் றங்களைக் குறித்து இயேசு கூறியுள்ளார். நண்பனே, வாய்ப்பை நழுவ விடாதே, உனக்கு வேறொரு வாய்ப்பு கிடையாது; இருக்கின்ற வாய்ப்பு இது ஒன்றே ஒன்று தான்.** ஒருக்கால் உன் கரத்தை இன்றிரவு தேவனுக்கு நேராக உயர்த்துவதே வித்தி யாசத்தை குறிக்கலாம். நாம் ஜெபிப்பதற்கு முன்னர் நீங்கள் கரத்தை உயர்த்துவீர்களா? கரத்தை உயர்த்தாதவர்கள் வேறு யாராவது உள்ளனரா? அங்கே கடைசியில் உள்ள வர்களே, தேவன் உங்களை ஆசீர்வதிப் பாராக. நாங்கள் அரங்கத்தின் மேற்பகுதி யின் வழியாக உங்களை நாங்கள்

காண்கிறோம். நீங்கள் மிகவுமாக அப்பாலே இருக்கிறீர்கள் என்று நினைக்க வேண்டாம்; நீங்கள் தூரமாக இல்லவே இல்லை. நீங்கள் சரியாக எங்கே இருக்கி றீர்கள் என்பதை அவர் அறிவார்.

72. நாம் காணக்கூடாத காரியங்களை நோக்கிப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். **நீங்கள், "சரி, நான் மறுபடியும் பிறந்த கிறிஸ்தவனாக ஆவதற்கு இப்பொழுது என்ன செய்ய வேண்டும்? என் முதலாளி என்ன கூறுவார்?". என்கிறீர்கள். நீ அப்படி யாக செய்யாவிட்டால் உங்கள் கர்த்தர் என்ன சொல்லுவார் என்று நினைத்துப் பாருங்கள். யார் மகத்தானவர்? உன் முத லாளியா? அடுத்த வாரமே நீங்கள் அவரை கல்லறையில் அடக்கம் செய்யக்கூடும். இந்த நேரத்திலே அவர் மரித்துப் போயிருப்பார், ஆனால் உங்கள் இயேசுவோ என்றென்றும் உயிரோடிருப்பார். நீங்கள் நரகத்தில் இருந்து**

**பிசாசினால் கடும் சித்திரவதைக்குட்பட்டு ... (ஊ) ... உங்களைச் சுற்றிலும் தீய ஆவிகள் சூழ்ந்து கொண்டு உங்களை ஓயாமல் வட்டமிட்டுக் கொண்டு, நீங்கள் தேவனிட மிருந்து என்றென்றுமாக பிரிக்கப்பட்டு, எந்த ஒரு நம்பிக்கையும் இல்லாமல் இருப்பதை சற்று நினைத்துப் பாருங்கள் - அதை குறித்து என்ன? நாளைக் காலை சூரியன் உதிப்பதற்கு முன்னர் ஒருக்கால் நீங்கள் அந்த இடத்தில் இருக்கலாம். நண்பனே, நீ தயாராக இருப்பது நன்று. இதை ஒரு தமாஷாக, ஜோக்காக எடுத்துக் கொள்ள வேண்டாம். இதை ஒரு தொலைக்காட்சி நடிப்பைப் போன்று எடுத்துக் கொள்ள வேண்டாம். நினைவில் கொள், இது ஒருக்காலும் அழியாத தேவனுடைய நித்திய வார்த்தையாகிய சுவிசேஷமாகும்.**

73. **இன்றிரவு நான் இங்கே தெருவில் வந்து கொண்டிருந்த போது ஒரு விபத்தில் நசுங்கிப்போயிருந்த ஒரு வாலிப மனிதன்**

தெருவிலிருந்து தூக்கிச் செல்லப்பட்டதை நான் கண்டேன். அவன் ஓட்டி வந்த கார் கட்டுப்பாட்டை இழந்து வேறொரு காரின் மீது மோதினது. அவனிலிருந்து இரத்தம் பெருக்கெடுத்து ஓடினது. அவசர ஊர்தியில் அவனை எடுத்து கிடத்திக் கொண்டிருந்தனர். அந்தப் பையன் வாய்ப் பிளந்தவனாக அங்கே கிடந்தான், அவனுடைய கண்களிலிருந்தும் காதுகளிலிருந்தும் இரத்தம் வெளிவந்துக் கொண்டிருந்தது. அவனின் மீது ஒரு போர் வையைப் போர்த்தி அவன் முகத்தை மூடி அவசர ஊர்தியில் தூக்கிப் போட்டனர். நான் அங்கே நின்று “ஓ தேவனே, அந்த பையன் என் கூட்டத்தில் பங்கெடுத்திருப்பானா? நான் அதிக நேரமாக வற்புறுத்தினேனா? அவன் இயேசுவை அறிந்திருந்தானா? எல்லாம் இப்பொழுது முடிந்து விட்டதே” என்று நினைத்தேன்.






அருமை நண்பனே, நான் உமக்குச் சொல்லுகிறேன், சில முக்கியமான விஷயங்களில் தேவனுடைய சித்தத்தை அறிந்து கொள்ள மிகச் சிறந்த வழி ஜெபமே
61-10-15M
கேள்விகளும்
பதில்களும் COD #15
சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்தியிலிருந்து



# ஜெபம் காரியங்களை மாற்றி விடுகிறதென்று நாமறிவோம்

சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

செய்தி: 61-10-15M கேள்விகளும் பதில்களும்

# அவருடைய வாக்குத்தத்தங்கள் ஒருபோதும் தவறிப்போக முடியாது



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

## செய்தி: இந்த மலையைப் பார்த்துப் பேசு, 59-11-23

தேவன் எதைக் கூறினாலும் அது பரிபூரணமாயுள்ளது; அவரால் அதைத் திருத்தவோ அல்லது திரும்பப் பெறவோ முடியாது.

அது பரிபூரணமாயுள்ளது, ஏனென்றால் தேவன் பரிபூரணமாயிருக்கிறார், அவருடைய வார்த்தைகளும் பரிபூரணமாயுள்ளன.

அவருடைய வாக்குத்தத்தங்கள் ஒருபோதும் தவறிப்போக முடியாது.

இப்பொழுது, நீங்கள் வேதத்தை வாசிக்கும் போது, தேவனுடைய வாக்குத்தத்தங்களை விசுவாசிப்பதற்கு, நீங்கள் நிச்சய

மாக அம்மாதிரியான விசுவாசத்தை தேவன் மேல் கொண்டிருக்க வேண்டும்.

அவர் பரிபூரணமாயிருக்கிறார் என்றும் அவருடைய வார்த்தைகள் பரிபூரணமா யிருக்கிறது என்றும் நீங்கள் நிச்சயமாக நினைவில் கொள்ள வேண்டும், அவைகள் ஒருபோதும் தவறிப்போக முடியாது; அவைகள் ஒருபோதும் திருத்தப்பட முடியாது; அவைகள் ஆரம்பம் முதலே பரிபூரணமாயுள்ளன.

19. இப்பொழுது, பத்து வருடங்க ளுக்கு முன்பு உருவாக்க முடிந்த காரைக் காட்டிலும் ஒரு சிறந்த காரை நம்மால் இன்றைக்கு உருவாக்க முடியும்.

நீங்கள் அநேகமாக இன்று ஒரு சிறந்த விமானத்தை உருவாக்க முடியும்; விஞ் ஞானிகளால் அதைச் செய்ய முடியும்.

காரணம் என்னவெனில் நாம் முடிவுள்ளவர்களாயிருக்கிறோம், நாம் அறிவின் விருட்சத்தில் முன்னேற்றமடைந்து கொண்டிருக்கிறோம்.

ஆனால் தேவன் துவக்கமுதலே பரிபூரணமாயிருக்கிறார்; அவர் எதையாவது கூறும்போது, அது பரிபூரணமாயுள்ளது. அது ஒருபோதும் திருத்தங்கள் செய்யப்பட முடியாது.

ஆகையால், தேவன் ஒரு வாக்குத்தத்தம் பண்ணும்போது, அந்த வாக்குத்தத்தமானது நித்தியமாக சரியாயுள்ளது.

அது சரியாக இருப்பதைத் தவிர வேறெதாகவும் ஒருபோதும் இருக்க முடியாது.



# கழுகின் சத்தம்

## ஜனவரி 14, 2024



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்திகளிலிருந்து